பரீட்சார்த்தமாக சென்ட்ரல் குக்கிங் ஸிஸ்டம் என்ற சிஸ்டத்தை வைத்திருந்தார்கள். நான் இந்த கேள்வியை கேட்பதன் நோக்கமே அந்த பணியில் இருப்பவர்களை பல குற்றச் சாட்டுகளிலிருந்து தவிர்ப்பதற்காகத்தான். கடந்த ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத்தில் செய்ததைப்போல் குறைந்தபட்சம் ஏதாவது ஒரு ஊராட்சி ஒன்றியத்தை எடுத்து, ஒன்றிய அளவிலே சமைத்து குழந்தைகளுக்கு பரிட்சார்த்தமாக கொடுப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மையங்களில் தவறுகள் ஏற்படுகின்றது என்பதனால் மையமாக ஒரு இடத்தில் சமைத்து அதை வழங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி சமைத்து எடுத்துக் கொண்டு போகும் போது கூட ஏதாவது தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டாகும். இந்த முறையை விட அந்த முறை நல்லது என்று சொல்வதற்கில்லை. இப்பொழுது இருக்கும் முறையே நல்லது என்று சொல்கிறார்கள். எங்காவது தவறுகள் ஏற்பட்டால், அதை சுட்டிக் காட்டினால் அந்த தவறுகளுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பீளமேடு நெசவாளர் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம்.

752—(*வினா எண். 8084) திரு. கு. ரமணி : மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம் பீளமேட்டில் உள்ள வ.உ.சி. ஆலைத் தொழிலாளர் கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் நெ. கே. 1705 செயல்பட முடியாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) ஆம்.

(ஆ) இச்சங்க நிர்வாகத்தில் சில முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாலும் சங்கத்தின் நிர்வாகக்குழுவினர் சங்க நடவடிக்கைகளைச் செவ்வனே செய்யாமையாலும் நிர்வாகக்

1986 மே 14]

குழுவைக் கலைத்து ஒரு சிறப்பு அலுவலரை நியமித்து, சங்கத்தைச் சரிவர செயல்படுத்துவது குறித்து வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அளவில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சங்கத்தினுடைய தலைவர் 7 ஆண்டுகளாக தலைவராக இருக்கிறார். அவர் 1983 லே இன்சால்வன்சி பெட்டிஷன் கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவர் மெம்பராக இருக்க முடியாது. 3 வருஷமாக நடவடிக்கை எடுக்கணும் என்று அங்கிருக்கின்ற டெப்டி ரெஜிஸ்டாரிடம் கொடுத்தும் கூட அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த டெப்டி ரெஜிஸ்டார் பேரில் கூட நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் பிரச்சினை தீராது. இப்போதுள்ள பிரச்சினை என்னவென்றால் அதில் இருக்கின்ற டைரக்டர்களும், மெம்பர்களும் 20 வருடத்திற்கு மேலாக ஒழுங்காக பங்ஷன் பண்ணக்கூடிய இந்த சொசைட்டியை கலைக்கக்கூடாது, கலைப்பது தவறு என்று சொல்கின்றனர். வேறு உதவி தலைவருக்கு அதிகாரம் கொடுத்து, ஜெனரல் பாடி மீட்டிங் போட்டு ஒரு புதிய போர்டை தேர்ந்தெடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, பொதுவாக இந்த சங்கத்தை பொறுத்தவரையில் 2–10–1979 க்கு பிறகு பொதுக் குழு கூட்டமே கூட்டப்படவில்லை. அதற்குபிறகு 1980 லிருந்து 1985 ஆண்டுவரை 39 நிர்வாகக் கூட்டங்கள் கூட்டுவதாக அறிவிப்பு வந்ததற்கு பிறகும், அந்த நேரத்தில் சரியாக உடனடியாக அந்தக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்ட முறையில் ஆரம்பத்திலிருந்து இப்படிப்பட்ட முறைகேடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு பொது நிர்வாக கூட்டத்தை கூட்டுமாறு தான் கேட்டார் என்று நினைக்கிறேன். அந்த முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டு காலமாக அங்கிருக்கின்ற டெப்டி ரிஜிஸ்ட்டாரை கோர்ட்டால் விசாரணை செய்வதற்கு உரிமை இருக்கிறது. அதற்கும் பெட்டிஷன் சமர்ப்பிக்கப்பட்டு விசாரணை செய்யவில்லை. அவரே வந்து இந்த போர்டைக் கலைத்து தனி அதிகாரி வைக்க வேண்டும் என்ற தந்திரம் அதில் இருக்கிறதோ என்ற பயம் உறுப்பினர்களுக்கு ஏற்பட்டு என் கையில் மேமோரேண்டம் தந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து உடனடியாக தலையிட்டு ஒரு பொது குழு கூட்டத்தை கூட்டி அந்த போர்டை முறையாக தேர்ந்

தெடுப்பதற்கு முயற்சி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். இந்த இன்சால்வன்சி கொடுத்த ஆள் அங்கே இருக்கக்கூடாது. He should be dismissed from the society. அப்படிச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, சங்கத்தின் நிதி நிலையை அனுசரித்து பார்க்கின்றபோது சில பிரச்சினைகள் எல்லாம் அங்கு இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் அந்த சங்கத்தை பொறுத்தவரையில் மொத்தம் 72 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 9—12—1985 அன்று 22 உறுப்பினர்கள் சங்கத் தலைவர் மீது நம்பிக்கை இல்லை என்று ஆரம்பத்திலேயே ஒரு முறை முடிவு எடுத்திருக்கிறார்கள். அப்பொழுது எத்தனை உறுப்பினர்கள் இப்படிப்பட்ட முடிவிற்கு வந்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. குறிப்பிட்ட அதிகாரிகள் அந்தச் சங்கத்திற்கு சென்று பொதுவாக உறுப்பினர்களுடைய ஒட்டுமொத்தமான நிலையை தெரிந்துகொண்டு அதற்கு பிறகு நல்ல முடிவை அரசு எடுக்கும்.

திரு. அ. மலர்மன்னன் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம் பிளமேட்டில் உள்ள வீடு கட்டும் சங்கத்திலும், திருச்சியிலே தில்லைநகர் கூட்டுறவு சொசைட்டி வீடு கட்டும் சங்கத்திலும் கடந்த 10 ஆண்டுகளாக இதுபோன்ற நிலமை உருவாகி பல முறைகேடுகள் அங்கு நடைபெறுவதாக முன்னாள் அமைச்சரிடம் கோரிக்கை தரப்பட்டது. அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த அமைச்சரவை நடவடிக்கை எடுத்து அந்த முறைகேடுகள் ஒழிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியை பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தச் சங்கத்தின் முழுமையான விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை. இருந்தாலும் எனக்கு நேரிடையாக தெரிந்த தகவலை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது நீதி மன்றத்திற்கு அந்த சங்கத்தைச் சார்ந்தவர்கள் சென்றிருப்பதனால், இடையிலே ஒரு முடிவு எடுக்காத சூழ்நிலை அரசுக்கு இருக்கிறது. நீதி மன்றத் தீர்ப்பு எப்போது என்று எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். அதற்கு தகுந்தாற்போல் அரசு முடிவு எடுக்கும்.